S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1978
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE ஞாயிறு நவம்பர் 16 * 2025 * மலர் -1 * இதழ்-168* VOL-1 * ISSUE-168 விலை ரூ.3 * பக்கம் -4

## தேர்தல் ஆணையத்தின் மதிப்பு தாழ்ந்துள்ளது:

# பீகார் சட்டசபை தேர்தல் முடிவு அனைவருக்குமான பாடம்!

## முதல்வர் ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் பதிவு!!




சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றும், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும், தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவு திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக, தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு கொண்டு செல்லும் வாகனங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே. என். நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் , மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை,அக்.நவ.16–

தேர்தல் ஆணையத்தின் மதிப்பு எவ்வளவு தாழ்ந்துள்ளது என்பதை பீகார் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன என்று மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

முதுபெரும் தலைவர் நிதிஷ்குமாரின் அபார வெற்றிக்காக நான் வாழ்த்துகிறேன், மேலும் பீகார் மக்களின் எதிர் பார்ப்புகளை நிறைவேற்றுவதில் அவருக்கு எனது நல்வாழ்த்துகள். இளம் தலைவர் தேஜஷ்வி யாதவ் அயராத பிரசாரத்திற்கும் நான் வாழ்த்து கூறுகிறேன். தேர்தல் முடிவுகள் நலன்புரி வழங்கல், சமூக மற்றும் சித்தாந்த கூட்டணிகள், தெளிவான அரசியல் செய்தி மற்றும் கடைசி வாக்குப்பதிவு வரை அர்ப்பணிப்புள்ள மேலாண்மை ஆகிய வற்றை பிரதிபலிக்கின்றன. இந்தியா கூட்டணியின் தலைவர்கள் செய்தியைப் படித்து, வளர்ந்து வரும் சவால்களை எதிர்கொள்ள மூலோபாய ரீதியாக திட்டமிடும் திறன் கொண்ட அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகள். இந்திய தேர்தல் ஆணையத்தின் மதிப்பு எவ்வளவு தாழ்ந்துள்ளது என்பதை இந்த தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. இந்திய தேர்தல் ஆணையத்தின் நற்பெயர் மிகவும் தாழ்ந்த கட்டத்தில் உள்ளது. வெற்றியே பெறாதவர்களுக்கு கூட நம்பிக்கை அளிக்கும் வகையில் தேர்தல் ஆணைய செயல்பாடு இருக்க வேண்டும்

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "மாணவர்கள் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி"

## அரசு பள்ளியில் நடந்த குழந்தைகள் தின விழாவில் கற்பகம் உயர்கல்வி அகாடமி முதல்வர் பேராசிரியர் கதிரவன் பேச்சு!!!














அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகத்தின் தேசிய கௌரவ தலைவர் முன்னாள் நீதியரசர் மாண்புமிகு கற்பக விநாயகம் அவர்களின் வழிகாட்டுதல் படி இவ்வமைப்பின் நிறுவனத்தலைவர் முனைவர் ஆர்.கே.குமார் தலைமையில் குழந்தைகள் தின விழா கோவை அன்னூர் காட்டம்பட்டி அரசு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நடந்தது. இந்த விழாவிற்கு மாநில பொதுச்செயலாளர் வி.எச்.சுப்ரமணியம், துணைத்தலைவர்கள் முன்னாள் வட்டார போக்குவரத்து அலுவலர் கிருஷ்ணசாமி, செந்தில் குமார், இப்பள்ளியின் தலைமை ஆசிரியர் சண்முகசுந்தரம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக கட்டிடக்கலை பீடம்,கற்பகம் உயர் கல்வி அகாடமி முதல்வர் கதிரவன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மாணவர்களிடம் உரையாற்றுகையில் உலகில் முதல் முறையாக குழந்தைகள் தின விழா சுமார் 160 ஆண்டுகளுக்கு முன்பே 1857ம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள சார்லஸ் பாதிரியார் குழந்தைகளை மகிழ்விக்க அவர்களுக்கு சிறப்பு சேர்க்கும் வகையில் பிப்ரவரி மாதம் இரண்டாவது ஞாயிற்று கிழமை கொண்டாடினார். அந்த சமயத்தில் அனைத்து குழந்தைகளையும் அழைத்து அவர்களுடன் கொண்டாடினார்.

அது காலப்போக்கில் பல்வேறு மாற்றங்களை அடைந்து விட்டது என கூறினார். தொடர்ந்து பேசிய அவர் இந்தியாவின் சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம மந்திரி நேரு அவர்களை அன்புடன் குழந்தைகள் நேரு மாமா என்று அன்புடன் அழைப்பார்கள். குழந்தைகள் நல்ல கல்வி கற்க வேண்டும் அவர்களை நல்லபடியாக பார்த்து கொள்ள வேண்டும் என பணியாற்றினார். அவரதுமறைவுக்குபிறகுஅவரதுநினைவைபோற்றும் வகையில் இன்றைய தினம் குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டு வருகிறது. ஆகவே குழந்தைகள் நல்ல கல்வி கற்று வளர்ச்சி அடைய வேண்டும். அப்போது தான் நமது நாடு வளர்ச்சி அடையும் என கூறினார். ஆகவே மாணவர்களாகிய நல்ல முறையில் கல்வி கற்று நாட்டை உயர்த்திட வேண்டும் என பேசினார். அவரை தொடர்ந்து இவ்வமைப்பின் நிறுவனத்தலைவர் முனைவர் ஆர்.கே.குமார் மற்றும் பொதுச்செயலாளர் வி.எச்சுப்பரமணியம் ஆகியோர் உரையாற்றினார்கள். இந்த நிகழ்வில் சீகாமணி, மகேஷ், பள்ளி ஆசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தநிகழ்வில்இறுதியாகமாணவ, மாணவிகளுக்கு சிறப்பு விருந்தினர் கதிரவனுடன் இணைந்து அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகத்தின் நிறுவன தலைவர் முனைவர் ஆர். கே.குமார் மற்றும் பொது ச்செயலாளர் வி.எச். சுப்பரமணியம் ஆகியோர் இனிப்புகளை வழங்கி சிறப்பித்தனர்.

திருப்பத்தூரில்

# தேசிய குழந்தைகள் தினம்!

## கலெக்டர் தொடங்கி வைத்தார்!!



திருப்பத்தூர் நவ.16

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து தூய நெஞ்ச கல்லூரிவரைகுழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை சார்பில் நவம்பர் 14 தேசிய குழந்தைகள் தினம் மற்றும் நவம்பர் 19 சர்வதேச குழந்தைகளுக்கு எதிரான சிலிண்டர்கள் தினத்தை முன்னிட்டு குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் சிவசந்திரவல்லி. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சியாமளா தேவி சியாமளா தலைமை.

தாங்கி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கப்பட்ட இந்த விழிப்புணர்வு பேரணி முக்கிய சாலைகள் வழியாக சென்று தூய நெஞ்சக் கல்லூரி வரை நிறைவு பெற்றது.

இப்பேரணியில் கல்லூரி மாணவ மாணவிகள், தன்னார்வலர்கள் உட்பட 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு குழந்தைகள் திருமணம் தடுத்தல், குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு, பாலியல் வன்கொடுமையில் இருந்து குழந்தைகள் பாதுகாத்தல், குழந்தைகள் கல்வி இடைநிற்றலை தடுத்தல் குழந்தைகள் உதவி எண் 1098 ஆகியவை குறித்து விழிப்புணர்வு பதாகைகள் ஏந்திய படியும் கலை நிகழ்ச்சிகள் மூலமாகவும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்த பேரணியில் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ஜெயக்கமல் மற்றும் அரசு துறை அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# 2027க்குள் இந்தியாவில் வாடிக்கையாளர் சேவைப் பணிகளில் 50% ஐ AI தீர்க்கும்!

## சேல்ஸ்ஃபோர்ஸ் ஆய்வறிக்கை தகவல்!!




சென்னை ,நவ.16

சேல்ஸ்ஃபோர்ஸ் இந்தியா, அதன் சமீபத்திய ஸ்டேட் ஆஃப் சர்வீஸ் அறிக்கையில், செயற்கை நுண்ணறிவு (AI) சேவைத் துறையில் வழக்கமான பணிகளை தானியங்கிமயமாக்குவதோடு மட்டுமல்ல, வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் நிறுவன வளர்ச்சியையும் மாற்றி அமைக்கிறது என்று தெரிவித்துள்ளது. இந்திய சேவைத் துறைத் தலைவர்களின் கணிப்பில், தற்போதைய வழக்குகளின் 30% AI மூலம் கையாளப்படுகிறது; 2027க்குள் AI ஏஜென்ட்கள் 50% வழக்குகளை நிர்வகிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இது ஊழியர்களுக்கு உயர் மதிப்புள்ள பணிகளில் கவனம் செலுத்த உதவுகிறது மற்றும் மேலதிக விற்பனை வருவாயை 16% வரை அதிகரிக்க வாய்ப்பளிக்கிறது.

மன்கிரன் சௌஹான், நிர்வாக இயக்குநர்–விற்பனை மற்றும் விநியோகம், சேல்ஸ்ஃபோர்ஸ் இந்தியா கூறியதாவது, AI வெறும் வேலைத்திறனை அதிகரிப்பதில்லை, அது சேவைப் குழுக்களுக்கு வாடிக்கையாளர் தேவைகளை முன் கூட்டியே கணித்து, தனிப்பட்ட அனுபவங்களை வழங்க உதவுகிறது. சுபம் குப்தா, துணைத் தலைவர் – எஞ்சினியரிங், போர்ட்டர் நிறுவனம், AI சேவை குழுக்களுக்கு முக்கிய கூட்டாளியாக மாறி, பணிகளை தானியங்கி செய்து, ஊழியர்களுக்கு வாடிக்கையாளர்களுடன் ஆழமான உறவுகளை உருவாக்கும் நேரத்தை வழங்குகிற து என வெளிப்படுத்தினார்.

சேல்ஸ்ஃபோர்ஸ் இந்தியா பெங்களூரில் நடத்திய 'ஹார்ட் ஆஃப் சர்வீஸ் சம்மிட்'ல் 150க்கும் மேற்பட்ட தொழில் தலைவர்கள் கலந்து கொண்டு, AI, தரவு மற்றும் நம்பகமான புதுமை இந்தியாவில் வாடிக்கையாளர் சேவை யை எப்படி மாற்றிவருகிறது என்பதை விவாதி த்தனர். இதில் தொழில்நுட்பமும் அனுதாபமும் இணைந்து மனித அனுபவங்களை மேம்படுத்தும் புதிய ஏஜென்டிக் எண்டர்பிரைஸ் மாடலை உருவாக்குவதில் இந்தியாவின் முக்கிய பங்கு வெளிப்படுத்தப்பட்டது.

# தேனி, மதுரை மாவட்ட வைகை ஆற்றங்கரையோர மக்களுக்கு பொதுபணித்துறையினர் சார்பில் எச்சரிக்கை!



ஆண்டிபட்டி, நவ.16

வைகைஅணையில் இருந்து பாசனத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 2492 கன அடியாக உள்ளது. பெரியார் கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 1930 கன அடி வீதம் கால்வாய் நிரம்பும் அளவிற்கு தண்ணீர் திறக்கப்பட்டு செல்வதாலும், 58கால்வாய் வழியாக 62கன அடி தண்ணீரும்,

வினாடிக்கு 500 கன அடி வீதம் மதுரை மாவட்டத்தின் முதல் பூர்வீக பாசனபகுதி நிலங்களுக்கு வைகைஆற்றின் வழியாக தண்ணீர் திறக்கப்படுவதாலும் தேனி, மதுரை ஆகிய இரண்டு மாவட்ட வைகை ஆற்றங்கரையோர மக்களுக்கும், பெரியார் கால்வாய் செல்லும் வழித்தடத்தில் அமைந்துள்ள மக்களுக்கும் பொதுபணித்துறையினர் சார்பில் எச்சரிக்கை

தேனி மாவட்ட ம் ஆண்டிபட்டி அருகே அமைந்துள்ள மொத்தம் 71 அடி உயரம் கொண்ட வைகைஅணையின் நீர்மட்டம் 67.59 அடியாக உள்ள நிலையில் அணையில் இருந்து பாசனத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 2492 கன அடியாக உள்ளது. பெரியார் கால்வாய் பாசனத்திற்கு பெரியார் கால்வாய் நிரம்பி தண்ணீர் செல்லும் அளவிற்கு வினாடிக்கு 1930 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுவதாலும், 58 கால்வாய் வழியாக வினாடிக்கு 62 கன அடி வீதம் உசிலம்பட்டி தாலுகாவில் உள்ள கண்மாய் பகுதிகளுக்கு திறக்கப்படுவதாலும், வினாடிக்கு 500 கன அடி வீதம் வைகைஆற்றின் வழியாக மதுரை மாவட்டத்தின் முதல் பூர்வீக பாசனபகுதி நிலங்களுக்கு தண்ணீர் திறக்கப்படுவதாலும் தேனி, மதுரை ஆகிய இரண்டு மாவட்ட வைகை ஆற்றங்கரையோர மக்களுக்கும், பெரியார் கால்வாய் செல்லும் வழித்தடத்தில் அமைந்துள்ள மக்களுக்கும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பொது மக்கள் யாரும் ஆபத்தை உணராமல் வைகைஆற்றிலோ பெரியார்கால்வாயிலோ குளிப்பதற்காக இறங்க வேண்டாம் என்றும், வைகை ஆற்றையோ கால்வாயையோ கடக்க முயற்சிக்க வேண்டாம் என்றும் பொதுபணிதுறையினர் சார்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போதைய நிலவரப்படி வைகைஅணைக்கானநீர்வரத்துவினாடிக்கு 1745கன அடியாகவும் வைகை அணையில் நீர் இருப்பு 5223மில்லியன் கன அடியாகவும் உள்ளது.

# காஞ்சிபுரம் ரெப்கோ வங்கியில் சிறப்பு கடன் முகாம்!

காஞ்சிபுரம்,நவ.16

சிறப்பு கடன் முகாம் ரெப்கோ வங்கியில் காஞ்சிபுரம் கிளையில் கடன் முகாம் துவங்கப்பட்டது. வங்கியின் உயர் அதிகாரி ஜி.ஜெயச்சந்திரன் வாடிக்கையாளர்கள் கடன் மேலாவை குத்து விளக்




கினை ஏற்றி துவக்கி வைத்தார். காஞ்சிபுரம் கிளை மேலாளர் .எம்.இளைராஜா கூறுகையில் ரெப்கோ வங்கியானது கடந்த 57 ஆண்டுகளாக தங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்கி வருவதாகவும், சிறப்பு அடமான கடன் முகாம் 13.11.2025 முதல் 20.12.2025 வரை நடைபெறுவதாகவும் அதில் கலந்துகொண்டு கடன் பெற்று 50% வரை பரிசீலனை கட்டணம் தள்ளுபடி பெற்று வாடிக்கையாளர்கள் பயன்பெறலாம் எனவும் மேலும் வங்கியில் வைப்பு தொகைக்கு அதிகபட்சமாக 8.00% வட்டியும், தங்க நகைக்கு கிராம் ஒன்றுக்கு ரூ.8,200/ வரை கடன் பெறலாம் எனவும் கூறினார். பொதுமக்கள் அனைவரும் கீழ்க்கண்ட முகவரி அணுகி வங்கி சேவையினை பயன் பெறலாம்.



செங்கல்பட்டு மாவட்டம் கொளப்பாக்கத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தில் குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு தாய் வளர்ச்சி குழுமம் செயலாளர் சசிகுமார் ஏற்பாட்டில் குழந்தைகளுக்கு பழங்கள், இனிப்புகள் வழங்கி எதிர்காலத்தில் குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்பது குறித்தும், பள்ளிப் பருவ காலங்களில் நல்லொழுக்கங்களை எடுத்துரைக்கும் வகையில் விழிப்புணர்வைஏற்படுத்தினார். இதில் அங்கன்வாடி ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தேர்தல் ஆணையத்தால் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் SIR தமிழ்நாடு முழுதும் நடைபெற்று வருகிறது இதனைத் தொடர்ந்து அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடியாரின் பழனிச்சாமி அவர்களின் ஆணைக்கிணங்க கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் முன்னாள் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் எம்.சி.சம்பத் . ஆய்வு மேற்கொண்டார்.



கேரளா இருக்கி மாவட்டம் நெடுங்கண்டம் உப கல்வி மாவட்டத்திலுள்ள சாஸ்தா நடை அரசு ஆரம்ப பள்ளியில் பள்ளியின் சார்பாக குழந்தைகள் தினம் கொண்டாடப் பட்டது இவ்விழாவிற்கு தலைமையாசிரியர். பாண்டுரங்கன் தலைமை தாங்கினார் திருமதி சாரம்மா ஆசிரியை வரவேற்புரை ஆற்றினார். ஆசிரியை ஆர்த்தி பண்டித ஜவஹர் லால் நேருவின் வாழ்க்கை வரலாற்றையும் குழந்தைகள் மீது கொண்ட அன்பையும் பற்றி கூறினார்விழாவில்குழந்தைகள்நேருவைப்பற்றிகவிதைகளையும் கட்டுரைகளையும் பாடல்களை பாடி ஆடினர் எல்லோருக்கும் தலைமையாசிரியர் இனிப்புகள் வழங்கி முடிவில் ஆசிரியை சூரியா நன்றி உரையாற்றினார்.



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் அருகே சித்தலிங்கமடம் ஸ்ரீ விவேகானந்தா வித்யாலயா பள்ளியில் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு மரக்கன்று நடு விழா விமர்சையாக நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் பள்ளியின் தாளாளர் பாரி தலைமையில் நடைபெற்ற விழாவில் 500க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை பள்ளி மாணவர்கள் பள்ளி வளாகம் முழுவதும் சுற்றி நட்டனர் வீடு வீடாகச் சென்று மரக்கன்றுகளை வளர்க்க வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தினர் நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம் சிவகாசி மாநகராட்சி கிழக்கு பகுதி கழக செயலாளர் அர்ஜூன்சாம் மகன் பெயர் சூட்டு விழாவில் முன்னாள் அமைச்சரும், கழக அமைப்பு செயலாளர் கே.டி.ராஜேந்திரபாலாஜி கலந்து கொண்டார். நாடார் மஹாஜன சங்க பொதுச்செயலாளர் கரிக்கோல்ராஜ், ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் மான்ராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட பலர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, ஆகிய துறைகளின் சார்பில் நடைபெற்ற அரசு விழா மற்றும் குழந்தைகள் தின விழாவில் பள்ளி மாணவ,மாணவிகளுக்குமிதிவண்டிகள்மற்றும்சிறந்தபள்ளிகளுக்கானவிருதுகளைவழங்கினார்கள். அதனைத்தொடர்ந்து புதுக்கோட்டை மாநகராட்சி, இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 617 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, மாவட்ட கலெக்டர் மு.அருணா வழங்கினார்.

கொடைக்கானல்

# பிரதான வத்தலக்குண்டு ரோட்டில் பலியான மான்!

## வனத்துறையினர் விசாரணை!!



கொடைக்கானல்நவ.16

கொடைக்கானல் வத்தலக்குண்டு செல்லும் பிரதான ரோட்டில் மான் ஒன்று பலியானது.

வனத்துறையினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர். வத்தலக்குண்டு செல்லும் பிரதான ரோட்டில் மச்சூர் என்ற பகுதி உள்ளது. இங்கு விவசாய நிலங்களை ஒட்டி அடர்ந்த வனப்பகுதிகளும் உள்ளன.

வனப்பகுதிகளில் சிறுத்தை, காட்டெருமை, காடுப் பன்றி சாம்பார் மான், புள்ளிமான், உள்ளிட்ட வனவிலங்குகளும் பறவைகளும் வசிக்கின்றன.

இந்நிலையில் ரோட்டில் மான் ஒன்று இறந்து கிடப்பதாக வனத்துறையினருக்கு தகவல் கிடைத்தது.

அதன் பேரில் வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று பலியான மானை உடற்கூறு ஆய்வு செய்து அப்பகுதியில் புதைத்தனர்.

வனத்துறையினர் கூறுகையில் ரோட்டில் பலியான மான் செந்நாய் கூட்டம் துரத்தி கடித்து குதறியதால் பலியாகியுள்ளது என தெரிவித்தனர்.

பத்தாயிரம் கோடி கொடுத்தாலும் வேண்டாம்

# இருமொழிக் கொள்கையை தான் தமிழ்நாடு பின்பற்றும்!

## அமைச்சர் எ.வ.வேலு பிரகடனம்!!



திருப்பத்தூர் நவ.16

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் மீனாட்சி அரசு மேல்நிலைப் பள்ளியில், மாணவி களுக்கு விலையில்லா இலவச சைக்கிள்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு மாணவிகளுக்கு சைக்கிள்களை வழங்கிய அமைச்சர் எ.வ.வேலு உரை யாற்றியதாவது, மத்திய அரசு எவ்வளவு நிதி வழங்கினாலும், எங்கள் மாநிலத்தின் அடையாளம் தாய்மொழியான தமிழ். தமிழ்நாட்டுக்கு ஏற்றது இருமொழிக் கொள்கை மட்டுமே, என்று கூறினார்.

இந்நிகழ்வில் திருப்ப த்தூர் மாவட்ட ஆட்சியர் சிவசௌ ந்தரவல்லி, நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணாதுரை, ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தேவராஜ், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் வில்வநாதன். திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ் ராஜேந்திரன். மாவட்ட ஒன்றிய குழு தலைவர் என்.கே.ஆர் சூரியகுமார், திருப்பத்தூர் சேர்மன் சங்கீதா வெங்கடேசன், துணை சேர்மன் ஏ ஆர் சபியுல்லா, ஜோலார்பேட்டை ஒன்றிய செயலாளர் கவிதா தண்டபாணி, மாவட்ட கல்வி அலுவலர் புண்ணியகோடி சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

மாணவிகள், தலைமை ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



தேனி மாவட்டம், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம், திருமலாபுரம் ஊராட்சியில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த சிறு புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.



ராமநாதபுரம், ராமேஸ்வரம் ஆகிய பகுதிகளில் மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நெடுஞ்சாலைத் துறை ஆராய்ச்சி நிலைய இயக்குநரும், ராமநாதபுரம் மாவட்ட வெள்ள நிவாரண கணிப்பாய்வு அலுவலருமான சரவணன் இன்று ஆய்வு செய்தார். கோட்டப்பொறியாளர்கள் முருகன் (கட்டுமானம் & பராமரிப்பு), பிரசன்ன வெங்கடேசன் (தரக்கட்டுப்பாடு) நெடுஞ்சாலைத் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



நீலகிரி மாவட்டம், உதகை சி.எஸ்.ஐ ஜெல் மெமோரியல் மகளிர் உயர்நிலைப்பள்ளியில் பள்ளி கல்வித்துறையின் சார்பில், பள்ளி மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் , மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில் வழங்கினார். உடன் உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்ட முதண்மை கல்வி அலுவலர் திரு.திருநாவுகரசு உட்பட பலர் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்ட பெருந்திட்ட வளாக மைதானத்தில் கூட்டுறவுத்துறை சார்பில் 72ஆவது அகில இந்திய கூட்டுறவு வார விழா கொண்டாடும் வகையில் மினி மாரத்தான் போட்டியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் விழுப்புரம் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் ஏ.விஜயசக்தி உட்பட பலர் உள்ளனர்.



72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவின் தொடக்க நாளான சிவகங்கையில் உள்ள திருக்கோஷ்டியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் வளாகத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் கூட்டுறவு கொடி ஏற்றி வைத்து உறுதி மொழி எடுத்துக்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கா.பொற்கொடி கலந்து கொண்டார்கள். மேலும் கூட்டுறவு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



கமுதி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க அலுவலகம் முன்பு கூட்டுறவு வாரவிழா தொடக்க நாளில் கூட்டுறவு கொடியை செயலாட்சியர் எம்.பி.ரீத்தி ஏற்றிவைத்தார். பொதுமேலாளர் ஐ.போஸ் அனைவருக்கும் இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில் மேனேஜர்கே. முத்தையா உள்பட ஊழியர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

## இந்திய சர்வதேச ஜவுளி எந்திர கண்காட்சி சங்கம் சார்பில் சிங்கப்பூரில் 'வணிக மாலை' நிகழ்ச்சி!

கோவை, நவ. 16

இந்திய ஜவுளித் துறைக்கு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கவும் இந்திய ஜவுளி மற்றும் ஜவுளி பொறியியல் துறையில் வளர்ச்சிக்கான கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும், அதில் உள்ள வாய்ப்புகளை ஆராய்வதற்கும் இந்திய சர்வதேச ஜவுளி எந்திர கண்காட்சி சங்கம் "ஜவுளித் துறையின் எதிர்காலத்தை உருவாக்குதல் பாரம்பரியத்திலிருந்து உயர்தொழில்நுட்பம் வரை" என்ற தலைப்பில் சிங்கப்பூரில் சமீபத்தில் ஜவுளி அமைச்சக அதிகாரிகள், தூதரக அதிகாரிகள், தொழில்முனைவோர், தொழில்நுட்ப வல்லுனர்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் பங்கேற்ற 'வணிக மாலை' நிகழ்ச்சியை நடத்தியது. இந்திய வணிக மாலை நிகழ்ச்சியில் இந்திய ஐடிஎம்இ சங்கத்தின் கவுரவ பொருளாளர் செந்தில் குமார்; ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் பாலியஸ்டர் பிரிவு தலைவர் ஹேமந்த் சர்மா; இந்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் ரோஹித் கன்சால்; சிங்கப்பூருக்கான இந்திய உயர் ஆணையர் டாக்டர் ஷில்பக் அம்புலே; பிரிட்டிஷ் ஜவுளி எந்திர சங்கத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஜேசன் கென்ட்; இந்திய ஐடிஎம்இ சங்கத்தின் தலைவர் கேதன் சங்க்வி; இந்திய ஐடிஎம்இ சங்கத்தின் நிர்வாக இயக்குனர் சீமா ஸ்ரீவாஸ்தவா ஆகியோர் பங்கேற்றனர்.

இதில் சமீபத்தில் முடிவடைந்த தீபாவளி கொண்டாட்டங்கள் குறித்தும், ஜவுளி, ஜவுளி தொழில்நுட்பம் மற்றும் எந்திரங்களுக்கான புதிய ஆதாரங்கள் மற்றும் வர்த்தக கூட்டணிகளை ஆராய்தல், அது தொடர்பான கல்வி மற்றும் சாத்தியமான கூட்டாண்மை க்கான வலையமைப்பை உருவாக்குதல் என பல்வேறு விஷயங்கள் குறித்து இந்த மாலைப் பொழுதில் விவாதிக்கப்பட்டது. இதில் அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, சுவீடன், இந்தோனேசியா, பங்களாதேஷ், இலங்கை, தைவான், துருக்கி, ஜெர்மனி மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 183க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி; ஜி.கே.வாசன் வாழ்த்து!

சென்னை, நவ.16

பீகார் மாநில சட்டமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கிறது வாழ்த்துக்குரியது.

பீகார் மாநிலம் படிப்படியாக வளர்ச்சி பெற்று முன்னேறியிருக்கிறது. பாரதப் பிரதமர் மோடி மற்றும் முதல்வர் நிதிஷ்குமார் ஆகியோரது சரியான செயல் பாட்டிற்கு பீகார் மக்கள் வாக்கின் மூலம் நம்பிக்கை அளித்திருப்பது பாராட்டுக் குரியது. காங்கிரஸ் கூட்டணி கட்சியினர் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகள் குறித்து கூறியதையும், தேர்தல் ஆணையத் தின் மீது கூறிய முறைகேடு களையும் பீகார் மாநில வாக்காளர் கள் முறியடித்திருக்கிறார்கள்.

எனவே மத்திய மாநில அரசுகளுடைய ஒத்த கருத்துகள் அம்மாநில வளர்ச்சி என்பதை இந்த தேர்தலின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள பாஜக, ஐக்கிய ஜனதா தளம் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## உளுந்தூர்பேட்டை அருகே விபத்து; இளைஞர் உயிரிழப்பு!



உளுந்தூர்பேட்டை, நவ.16

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருநாவலூர் அடுத்த சிறுத்தனூர் கிராமத்தைச் சேர்ந்த வெங்கடேஷ் என்பவர் தனது தங்கையை தச்சு பயிற்சிக்காக கெடிலும் செல்லும் பொழுது சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலை மேட்டத்தூர் அருகே நான்கு சக்கரம் வாகனம் இரு சக்கர வாகனத்தின் மீது மோதியதில் சம்பவ இடத்திலே வெங்கடேஷ் என்ற இளைஞர் உயிரிழந்தார். மேலும் உயிரிழந்த இளைஞரின் தங்கை மற்றும் காரில் பயணித்த மூன்று பேர் பலத்த படுகாயங்களுடன் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பி அனுப்பி வைத்தனர்.

மேலும் தேசிய நெடுஞ்சாலை மேட்டத்தூர் பகுதியில் தொடர் விபத்திற்கு காரணமாக இந்த பகுதியில் குறுகிய பாலம் இருப்பதாகவும் இதனை பல முறை மாவட்ட நிர்வாகம் மற்றும் நெடுஞ்சாலை துறை அதிகாரியிடம் பொதுமக்கள் மற்றும் பகுஜன் சமாஜ் கட்சியின் சார்பில் புகார் அளித்தும் மெத்தனம் காட்டி வருவதாகவும் இனிவரும் காலங்களில் இது போன்ற விபத்துக்கள் தவிர்க்கப்பட வேண்டும் எனவும் எனவே உடனடியாக பாலத்தை விரிவு படுத்த வேண்டும் எனவும் பகுஜன் சமாஜ் கட்சியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் P.சிவபெருமான் கோரிக்கை விடுத்து ள்ளார். மேலும் இளைஞரை இழந்து வாடும் குடும்பத்திற்கு தமிழக அரசு 20 லட்சம் வழங்க வேண்டும் எனவும் பகுஜன் சமாஜ் கட்சியின் சார்பில் கோரிக்கை விடுத்துள்ளார்.



கிருஷ்ணகிரி மாவட்டம் வேட்டியம்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட பேடேப்பள்ளி அரசு தொடக்கப்பள்ளியில் குழந்தைகள் தின விழா பள்ளியின் தலைமை ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. மாணவர்கள் பல்வேறு வேடங்கள் அணிந்தும் குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது. இதில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கியும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

### வாணியம்பாடி அருகே

## ஈச்சங்கால் ஊராட்சியில் பகுதி நேரம் நியாய விலை கடை திறப்பு!



வாணியம்பாடி, நவ.16

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த ஈச்சங்கால் ஊராட்சி பகுதியில் நியாய விலை கடை அமைக்க வேண்டும் என்று பகுதி மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து வந்தனர்.

இதன் அடிப்படையில் மாவட்ட ஊராட்சி குழு துணைத்தலைவர் பிரியதர்ஷினி ஞானவேலன் நிதியில் 15 வது மாநில நிதிக் குழு மான்யம் 20232024 கீழ் ரூபாய் 9.77 லட்சம் மதிப்பீட்டில் பகுதி நேரம் நியாய விலைக் கடை கட்டப்பட்டு அதன் திறப்பு விழா இன்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்ற தலைவர் ரா.எழுமலை தலைமை வகித்தார். துணைத்தலைவர் வி.வள்ளி, தேவஸ்தானம் ஊராட்சி மன்ற தலைவர் வி.ஜி.அன்பு ஆகியோர் முன்னிலை வகித்தனர். நியாய விலை கடை விற்பனையாளர் நித்தியா அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் வி.எஸ்.ஞானவேலன், ஒன்றிய குழு தலைவர் சங்கீதா பாரி ஆகியோர் கலந்து கொண்டு பகுதி நேரம் நியாய விலை கடையை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தும், குத்து விளக்கு ஏற்றி திறந்து வைத்தனர். தொடர்ந்து கல்வெட்டு திறந்து வைத்து விற்பனை தொடங்கி வைத்தனர். இதனை தொடர்ந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் திமுக கிளை செயலாளர் தண்டபாணி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆறுமுகம், பவானி, மகேஸ்வரி, பூபதி, தேவன் மற்றும் ஊர் பொது மக்கள் கலந்து கொண்டனர். முடிவில் நியாய விலை கடை மேற்பார்வையாளர் பாபு நன்றி கூறினார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி சேர்ந்த 11 ம் வகுப்பு பயிலும் 367 மாணவ மாணவியர்களுக்கு ரூ. 17 இலட்சத்து 67 ஆயிரத்து 920 மதிப்பிலான மிதிவண்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே. மதியழகன்ஆகியோர்வழங்கினார்கள்.உடன்மாவட்டபிற்படுத்தப்பட்டோர்மற்றும்சிறுபான்மையினர் நலத்துறை அலுவலர் பத்மலதா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் இரா.மதன்குமார், பர்கூர் பேரூராட்சி தலைவர் சந்தோஷ் குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### திருப்பத்தூரில்

## 72வது அனைத்து இந்திய கூட்டுறவு வார விழா!

### அமைச்சர் எ.வ.வேலு பங்கேற்பு!!



திருப்பத்தூர் நவ.16

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அடுத்த ஆதியூரில் உள்ள தனியார் மண்டபத்தில் 72வது அனைந்திந்திய கூட்டுறவு வார விழா மாவட்ட ஆட்சியர் சிவசௌந்தரவல்லி தலைமையில் நடைபெற்றது. கூட்டுறவுசங்கங்களின்மண்டலஇணைப் பதிவாளர்தமிழ் நங்கை முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு பங்கேற்று 3300 பயனாளிகளுக்கு, 30 கோடி மதிப்பீட்டில் நலத்திட்டங்களை வழங்கினார். கூட்டுறவுத்துறை சார்பாக நடைபெற்ற கட்டுரைபோட்டி பேச்சுப்போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்க்கு சிறந்த கூட்டுறவு மையத்திற்கு கேடயம் சான்றிதழ் உள்ளிட்டவற்றை வழங்கினார். அப்போது பேசிய அமைச்சர்.எ.வ.வேலு, சிறுதுளி தான் ஏரியிலும் ஆறாகவும், அணைகளிலும் ஓடி மக்கள் பயன்பாட்டிற்கு பெருவெள்ளமாக வருகிறது. அந்த வகையில் தான் கூட்டுறவு சங்கங்கள் என்பது முதன் முதலாக சுதந்திரம் அடைவதற்கு முன்னர் 1940 ஆம் ஆண்டு இந்தியா விலேயே தமிழகத்தில் முதன் முதலாக திருவூர் என்ற ஊரில் கூட்டுறவு சங்கம் துவங்கப்பட்டது. இந்தியாவிற்கே வழிகாட்டிய மாநிலம் தமிழகம் தான். தமிழகத்தில் கூட்டுறவு சங்கம் துவங்க உந்து சக்தியாக இருந்தவர் வ. உ.சி. தான் அவர்தான் முதன்முதலாக அயல் நாட்டின் போட்டி போட்டுக் கொண்டு கூட்டுறவு சங்கங்களை உருவாக்கியதன் மூலமாக கூட்டுறவு சங்கங்கள் வளர்ச்சி அடைந்தது.

மேலும், மாநிலத்தில் நுகர்பொருள் வாணிக் கிடங்கு, என்று ஒரு அமைப்பு இருக்கும், அதுதான், மத்திய அரசிடம் இருந்து பொருட்களையெல்லாம் வாங்கி, அனைத்து ரேஷன் கடைகளுக்கும் அனுப்பும், தற்போது, 2 கோடிக்கு மேல் குடும்ப அட்டைகள் இருக்கிறது என்றால், 32,000 க்கு மேல் ரேஷன் கடைகள் இருக்கிறது. என்றால் அவற்றிக்கு, ரேஷன் பொருட்களை அனைத்தும் அனுப்பும் பணி நுகர்பொருள் வாணிபக்கிடங்கில் தான். தமிழகத்தில், நுகர்ப்பொருள் வாணிபகிடங்கு திட்டத்தை உருவாக்கியவர் கலைஞர் ஆட்சியில் தான் நுகர்பொருள் வாணிப கழகம் வந்தது.

கூட்டுறவு சங்கம் கூட்டுறவு மைய வங்கி, உள்ளிட்ட கூட்டுறவு துறைக்கு தாயாக இருப்பது கழக ஆட்சியில் கலைஞர் கொண்டு வந்தது தான். கூட்டுறவு சங்கங்களுக்கு தற்போது தாயாக இருப்பவர் தளபதி தான் என, பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப் பினர்கள் க.தேவராஜ் அ. நல்லதம்பி அ.செ.வில்வநாதன், திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ். ராஜேந்திரன், மாவட்ட ஒன்றிய குழு தலைவர் சூரியகுமார், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் சந்திரசேகரன், ஜோலார்பேட்டை ஒன்றியக் குழுத் தலைவர் சத்யா சதீஷ், கந்திலி ஒன்றிய சேர்மன் திருமதி திருமுருகன், திருப்பத்தூர் நகர சேர்மன் சங்கீதாவெங்கடேசன், ஜோலார்பேட்டை சேர்மன் காவியா விக்டர், துணைச் சேர்மன் ஏ ஆர் சபியுல்லா, கந்திலி ஒன்றிய செயலாளர குணசேகரன், முருகேசன் மோகன்ராஜ், கூட்டுறவுத் துறை அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், பல்லடம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் பள்ளி மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேம்பாட்டு துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அவர்களும் கலந்து கொண்டு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார்கள் உடன் திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மணிஷ் நாரணவரே, , திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளருமான . இல.பத்மநாபன் , மாவட்ட கல்வி அலுவலர், பள்ளி கல்வித்துறை அதிகாரிகள், தலைமை ஆசிரியர்கள், கழக நிர்வாகிகள், மாணவமாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# அதிமுக ஆட்சி திட்டங்களை முடக்கிய திமுக! முன்னாள் அமைச்சர் கே.பி அன்பழகன் திண்ணைப் பிரச்சாரத்தில் குற்றச்சாட்டு!!



தர்மபுரி,நவ.16

தர்மபுரி மாவட்டம் மாட்லாம்பட்டி பகுதியில் முக்கிய சாலைகள் வழியாக வீதி வீதியாக சென்று திண்ணைப் பிரச்சாரம் மற்றும் துண்டு பிரசுரங்கள் வழங்கும் நிகழ்ச்சி முன்னாள் அமைச்சர் எம்.எல்.ஏ கே.பி அன்பழகன் தலைமையில் நடைபெற்றது.முன்னாள் அம்மா பேரவை மாவட்ட செயலாளர் வெற்றிவேல் முன்னிலை வகித்தார்.

பேருந்து நிலையம் அருகே இருந்து தொடங்கிய திண்ணைப் பிரச்சாரத்தில் அதிமுகவினர் மெயின்பஜார் உள்ளிட்ட பகுதிகளில் வீதி வீதியாக சென்று பொதுமக்களிடம் அதிமுக அரசின் சாதனைகளை விளக்கிக் கூறி மேலும் வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் திமுகவை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்றும் பொதுமக்களிடம் அதிமுகவினர் வலியுறுத்தி துண்டு பிரசுரங்களை வழங்கினர்.

இது பற்றி முன்னாள் அமைச்சர் கே.பி அன்பழகன் பேசுகையில் அதிமுக ஆட்சியின் திட்டங்களை முடக்கிய விடியா திமுக அரசு என்றும் நீர் மேலாண்மை திட்டத்தை விரிவுபடுத்த அதிமுக அரசு நிதி வழங்கி பணி ஆணை செய்தும் இந்த விடியா அரசு செயல்படுத்த முடியாமல் திணறி வருவதாக திமுக மீது குற்றம் சாட்டினார்.

இந்த பிரச்சாரத்தில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தசாமி, ஒன்றிய செயலாளர் செந்தில்குமார், செல்வராஜ், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் காவேரி, கூட்டுறவு ஒன்றிய முன்னாள் தலைவர் பொன்னுவேல் கூட்டுறவு சர்க்கரை ஆலை முன்னாள் இயக்குனர் ரவிசங்கர், டாக்டர்கள் சந்திரமோகன், அசோகன், முன்னாள் சேர்மன் மாணிக்கம், வழக்கறிஞர் பாரதி, ஐ.டி.விங்க சாந்தகுமார் , ஜெயபிரகாஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆட்சியருக்கு வேண்டுகோள்!



விழுப்புரம்,நவ.16

விழுப்புரம் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றன

இதில் என்னவென்றால் விழுப்புரம் மாவட்டம் முழுவதும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் கண் பார்வை இழந்தோர் இவர்கள் அனைவரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள் மனு கொடுக்கும் பொழுது புதிய பேருந்து நிலையத்திலிருந்து திக்கு முக்காடி அல்லல் பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்து இருக்கிறார்கள் அங்கு வந்தும் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் கண் பார்வை இழந்தோர்களுக்கு அவர்களை துண்பம் படுகிறார்கள் மேற்கொண்டு மாவட்ட ஆட்சியர் அவர்கள் தனி கவனம் செலுத்தி திங்கள் மனு கொடுக்கும் நாளில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் கண் பார்வை இழந்தவர்கள் சிறப்பு வசதி செய்ய வேண்டும் மேற்கொண்டு அவர்களால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மேல் தளத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் மனு கொடுக்கும் பொழுது அவதிக்குள்ளாகிறார்கள் . தரை தளத்தில் திங்கள் மனு கொடுக்கும் பொழுது சிறப்பு வசதி செய்ய வேண்டும் அப்படி இல்லை என்றால் அந்த துரை சார்ந்த அதிகாரிகள் கீழே வந்து மனுக்கள் வாங்க வேண்டும்

திங்கள் மனு நாட்களில் 500 மக்கள் இருந்து 600 மனுக்கள் பெரபடுகின்றன

அந்த மனுக்களின் கோரிக்கை வைத்து உடனடியாக பரிசீலனை செய்து அந்தப் பணியை சிறப்பாக செயல்பட வேண்டும்

விழுப்புரம் மாவட்ட ஆட்சியருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



காவேரிப்பட்டினம் கிழக்கு மண்டல் பாரதிய ஜனதா கட்சியினர் பீகார் சட்டமன்றத் தேர்தல் வெற்றி பெற்றதை ஒட்டி பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கப்பட்டது . காவேரிப்பட்டினம் கிழக்கு ஒன்றிய தலைவர் சாமிநாதன் தலைமையில் மாவட்ட செயலாளர் மற்றும் மண்டல் பார்வையாளர் சரவணன் முன்னிலையில் மாநில செயற்குழு உறுப்பினர் வசந்த கோகிலம் மண்டல் பொது செயலாளர் அகிலன் மகளிர் அணி மாவட்ட துணை தலைவர் மஞ்சுளா விவசாய அணி மாவட்ட செயலாளர் சசிகுமார் மாவட்ட இளைஞரணி செயலாளர்கள் ரகு ராமன் அசோக் மண்டல் துணைத் தலைவர்கள் ஜெயபிரகாஷ் ஆனந்து வெங்கடாஜலபதி மண்டல் செயலாளர் சின்னசாமி மண்டல் செயலாளர் கார்த்திகேயன் பட்டியல் அணி மாவட்ட பொது செயலாளர் சென்னையன் பட்டியல் அணி ஒன்றிய தலைவர் அண்ணாமலை விருந்தோமால் மாவட்ட அமைப்பாளர் கோபாலகிருஷ்ணன் மீனவர் பிரிவு மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ் இளைஞரணி ஒன்றிய துணைத் தலைவர் கோபி செந்தில்குமார் மணிகண்டன் தெய்வமணி மற்றும் அதிமுக கூட்டணி கட்சியான நிர்வாகிகள் குணசேகரன், மன்னன், கண்ணன் மதியழகன், மனோகரன் அஇஅதிமுக நிர்வாகிகள்கலந்துகொண்டனர்மற்றும்அனைத்துநிலைபொறுப்பாளர்கள்முன்னிலையில் வெகு சிறப்பாக காவேரிப்பட்டினம் கிழக்கு மண்டல் சார்பாக கொண்டாடப்பட்டது

# பரமத்தி வேலூர் பேரூராட்சி தலைவர் மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் மீது மறைமுக வாக்குப்பதிவு!

பரமத்திவேலூர், நவ.16

வேலூர் பேரூராட்சியில் மொத்தம் 18 வார்டுகள் உள்ளன. இதில் 14 தி.மு.க உறுப்பினர்களும், 2 அ.தி.மு.க உறுப்பினர்களும், பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் சுயேச்சை என தலா ஒருவரும் வெற்றி பெற்றனர். இதில் வேலூர் பேரூராட்சி தலைவராக தி.மு.கவைச் சேர்ந்த லட்சுமி முரளியும், துணைத்தலைவராக தி.மு.கவைச் சேர்ந்த ராஜாவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்றுக் கொண்டனர். இந்நிலையில் பேரூராட்சித் தலைவருக்கும் துணைத் தலைவர் மற்றும் கவுன்சிலர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு நிலவி வந்த நிலையில் பேரூராட்சியில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக பேரூராட்சி மன்ற கூட்டங்களில் வளர்ச்சி திட்ட பணிகள் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் தீர்மானங்கள் நிறைவேற்றுவதில் பல்வேறு சிக்கல்கள் இருந்து வந்தது. இதனால் பேரூராட்சிக்கு அரசிடமிருந்து கிடைக்க வேண்டிய பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் பாதிக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த மாதம் பேரூராட்சித் தலைவர் லட்சுமி முரளி மீது தி.மு.க உறுப்பினர்கள் உட்பட 15க்கும் மேற்பட்டோர் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வந்தனர். இதனை எதிர்த்து பேரூராட்சி தலைவர் சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் நேற்று வேலூர் பேரூராட்சி மன்ற கூட்ட அரங்கில் செயல் அலுவலர் சண்முகம் தலைமையில் நம்பிக்கை இல்லா தீர்மானம் மீது ஓட்டுப் பெட்டி வைத்து மறைமுக வாக்குப்பதிவு நடத்தப்பட்டது. இதில் அ.தி.மு.க வைச் சேர்ந்த 2 உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை. தி.மு.கவைச் சேர்ந்த 14 உறுப்பினர்களும், ஒரு பா.ம.க உறுப்பினரும், ஒரு சுயேச்சை உறுப்பினர் உட்பட 16 பேர் கலந்து கொண்டு வாக்களித்தனர். அதனைத் தொடர்ந்து அனைத்து வாக்குப்பதிவு சீட்டுகளையும், வாக்குப்பதிவு குறித்த வீடியோ ஆவணம் உள்ளிட்ட அனைத்தும் சீலிடப்பட்டு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும், நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் முடிவு குறித்து நீதிமன்றத்தில் நீதிபதிகள் அறிவிப்பார்கள் எனவும் பேரூராட்சி செயல் அலுவலர் சண்முகம் தெரிவித்தார்.

# கிருஷ்ணகிரியில் வாலிபர் மீது தாக்குதல்! பிரபல ரவுடி உள்பட 2 பேர் கைது!!

கிருஷ்ணகிரி,நவ.16

கிருஷ்ணகிரியில் வாலிபரை தாக்கிய பிரபல ரவுடி உள்பட 2 பேரை போலீசார் கைது செய்தனர்.

கிருஷ்ணகிரி பழையபேட்டை இஸ்மாயில் தெருவை சேர்ந்தவர் நசீர் (21). இரவில் இவர் நேதாஜி சாலை கடைவாசல் மாரியம்மன் கோவில் அருகில் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அந்த நேரம் அங்கு கிருஷ்ணகிரி பழையபேட்டை நேதாஜி சாலையை சேர்ந்த ரவுடி குல்பி என்கிற மணிமாறன் (25), அவரது நண்பர் கிருஷ்ணகிரி கோட்டையை சேர்ந்த அஸ்கர் (20) ஆகிய 2 பேரும் வந்தனர். அவர்கள் நசீருடன் தகராறு செய்து ஆபாசமாக திட்டினார்கள். மேலும் இரும்பு வளையலால் நசீரை தாக்கி கத்தியை காட்டி மிரட்டினார்கள். இதில் நசீர் காயம் அடைந்தார். அது குறித்து நசீர் கொடுத்த புகாரின் பேரில் குல்பி என்கிற மணிமாறன், அஸ்கர் ஆகிய 2 பேரையும் போலீசார் கைது செய்தனர். கைதான குல்பி பிரபல ரவுடி ஆவார். அவர் மீது கிருஷ்ணகிரி டவுன் போலீஸ் நிலையத்தில் 2 கொலை வழக்குகள் உள்பட 10 வழக்குகளும், தாலுகா போலீசில் ஒரு வழக்கும், மகராஜகடை போலீசில் 3 வழக்குகளும் என மொத்தம் 14 வழக்குகள் உள்ளன.




# ஓசூர் அரசு பள்ளியில் விழா!

ஒசூர் நவ.16

முன்னாள் பாரதப் பிரதமர் ஜவகர்லால் நேருவின் பிறந்தநாளான நவம்பர் 14ம் தேதியை குழந்தைகள் தினமாக நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில் ஓசூர் ஆர் வி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று குழந்தைகள் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வுக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் டாக்டர் வளர்மதி தலைமை தாங்கினார். பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் என் செந்தில் குமார் அனைவரையும் வரவேற்றார்.

பள்ளியில் காலையிலிருந்து மாலை வரை பல்வேறு கலை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று கொண்டிருந்த அதே வேளையில் மதியம் மாணவர்களுக்கு பள்ளியில் அறுசுவை விருந்தும் அளிக்கப்பட்டது. மாலையில் நடந்த நிகழ்ச்சியில் பள்ளியின் முன்னாள் மாணவர் ஓசூர் மாநகராட்சி சுகாதாரக் குழு தலைவர் மாதேஸ்வரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பள்ளி மாணவர்களுக்கு பரிசு வழங்கி சிறப்புரை யாற்றினார். பெற்றோர் ஆசிரியர் கழக துணைத் தலைவர் சக்திவேல் இருபால் ஆசிரியர் பெருமக்கள் மாணவச் செல்வங்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். பள்ளியின் துணை தலைமை ஆசிரியர் ரமேஷ் நன்றி கூறினார்.

# நெல் பயிர் காப்பீடு செய்யும் தேதியை 30ம் தேதி வரை நீட்டிக்க வேண்டி விவசாயிகள் கோரிக்கை!

விழுப்புரம்,நவ.16

பாரத பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம் 202526 நடை பாண்டிற்க்கு ராபி சிறப்பு பருவத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள நெல் பயிர் உள்ளிட்ட 11 பயிருக்கு காப்பீடு செய்ய நவம்பர் 15ஆம் தேதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது

தீபாவளி மற்றும் ஆயுத பூஜை விடுமுறை காரணங்களாலும் தொடர் மழையின் காரணங்களாலும் கிராம நிர்வாக அலுவலர்கள் எஸ்ஐஆர் பணியில் ஈடுபட்டு வருவதாலும் பல விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய முடியாமல் சிரமப்பட்டு வருகின்றனர் ஒரு நாட்டின் முதுகெலும்பானது விவசாயிகள் அவர்களின் நலனின் அக்கறை கொண்டு விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விவசாயிகள் நலனுக்காக பயிர் காப்பீடு செய்யும் தேதியை நவம்பர் 30ஆம் தேதி வரை நீட்டிக்குமாறு விவசாயிகள் மற்றும் சமூக ஆர்வலர் டி.கொளத்தூர் ஏழுமலை கோரிக்கையாக உள்ளது.



விழுப்புரம் மாவட்டம் 75 விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஓரத்தூர் கிராமத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்த பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் விக்கிரவாண்டி வாக்காளர் பதிவு அலுவலர் சந்திரசேகர், உதவி வாக்காளர் பதிவு அலுவலர் செல்வமூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.

# ஆம்பூர் அருகே மனிதநேய மக்கள் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் சாலை மறியல்!



ஆம்பூர்.நவ.16

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த தேவலாபுரம் ஊராட்சிக்குட்பட்ட பாங்கிஷாப், பேஷ்இமாம் நகர், கோல்டன் சிட்டி, ஸ்டார் சிட்டி, உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இப்பகுதியில், சாலை, கழிவுநீர், கால்வாய் வசதி, குடிநீர், தெருவிளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்தரக் கோரி பகுதி மக்கள் அதிகாரிகளிடம் பலமுறை மனு அளித்தும் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் ஆத்திரம் அடைந்த பகுதி மக்கள், கிராம சபாவை புறக்கணித்து கருப்பு கொடி ஏந்தியும் பல்வேறு போராட்டங்களை நடத்திய நிலையில், அதிகாரிகள் அவ்வப்போது ஆய்வு செய்து மட்டுமே செல்வதாகவும், அடிப்படை வசதிகள் அமைக்க எவ்வித ஏற்பாடுகளும் செய்யவில்லை என்று கூறி, அதிகாரிகளை கண்டித்து வெங்கடசமுத்திரம் கூட்டச்சாலையில் மனிதநேய மக்கள் கட்சியினர் மற்றும் பகுதி மக்கள் இணைந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்,

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு காவல்துறையினர் மற்றும் மாதனூர் வட்டார வளர்ச்சி அலுவலர் மகராசி ஆகியோர் விரைந்து சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.மேலும் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததின் பேரில் போராட்டத்தை கைவிட்டு கலைந்துச் சென்றனர்.

இதனால் அப்பகுதியில் சுமார் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# வாணியம்பாடி அருகே டெஸ்டிடியூட் கேர் டிரஸ்ட் சார்பில் வயதான வர்களுக்கான வீடு கட்ட அடிக்கல் நாட்டு விழா!




வாணியம்பாடி, நவ.16

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே கணவாய் புதூர் பகுதியில் டெஸ்டிடியூட் கேர் டிரஸ்ட் சார்பில் வயதான மற்றும் புறக்கணிக்கப்ப ட்டவர்களுக்கான வீடு கட்ட அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட காஜி மௌலானா ஹாபிஸ் சையத் அப்துல் ரஹ்மான் தலைமை வகித்தார். அறக்கட்டளை தலைவர் வேலூர் அப்துல்லா பாஷா, நிர்வாக அறங்காவலர் டொக்கு முஹம்மத் இலியாஸ், பொருளாளர் கே.இக்பால் அஹமத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயலாளர் ஏ.பி.அஷ்வாக் அஹமத் அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக தமிழ்நாடு மஸ்ஜித் சேவை குழு ஒருங்கிணைப்பாளர் எம்.எஸ்.கே சையத் இப்ராஹீம், வேலூர் நூருல்லா பாஷா, பேரணாம்பட்டு மஸ்ஜித் சேவை குழு தலைவர் சி.அப்துல் வஹாப், சென்னை ஓமியத் பொருளாளர் முஹம்மத் ஹனீப் காதிப் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக திருப்பூர் மஸ்ஜித் சேவை குழு தலைவர் இசா எஸ்.சாதிக் அலி கலந்து கொண்டு வயதான மற்றும் புறக்கணிக்கப்பட்ட வர்களுக்கான வீடு கட்ட அடிக்கல் நாட்டி சிறப்புரையாற்றினர். இதனை தொடர்ந்து சிறப்பு பிரார்த்தனை நடைபெற்று பின்னர் இனிப்பு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் ஏ.ஆர்.இஷ்தியாக் அஹமத், டாக்டர் ஹாஜி அன்வருல்லா, வேலூர் அமானுல்லா பாஷா, வேலூர் முனீர் அஹமத், அஃப்சர் அஹமத், வேலூர் ஜஹீர் அஹமத், ஆம்பூர் சதாகத் அலி, வி.பி.ஃபஹீம், ஏஜாஸ் அஸ்லம் உள்ளிட்ட அறக்கட்டளை நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். அசாங்கனிமுஷ்தாக்அஹமத்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். முடிவில் அறக்கட்டளையின் செயலாளர் மோதி அல்தாஃப் அஹமத் நன்றி கூறினார்.



உடுமலையில் குடிநீர் கேட்டு பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.